FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS (Under Section 154 Cr.P.C.) (கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129866

1. District : திருவாரூர் மாவட்டம் | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 3 | Date: நாள் 10.08.25

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: BNSS | Sections பிரிவுகள்: 106

(iii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (As Amended in 2018) | Sections பிரிவுகள்: 7(a)

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 09.08.2025

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 14.15 Hrs to 19.30 Hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Copy FIR | Time நேரம் 10.08.2025 / 01.00 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் 10.08.2025 / 04.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : தணிக்கையில் கண்டறியப்பட்ட புகார்மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மோட்டார் வாகன ஆய்வாளர் பதி அலுவலகம், திருத்துறைப்பூண்டி 30 கி.மீ தொலை.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. N. இளங்கோவன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பூரண மைரன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 50/2025 | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் முதுநிலை அலுவலர் (ஓய்வு) | (g) Address : முகவரி மோட்டார் வாகன ஆய்வாளர் மாவட்ட ஆயுதப்படை அலுவலகம் திருவாரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. G. விஜயன் மைர் வயது 48/2025 S/o திரு நாதன்
மோட்டார் வாகன ஆய்வாளர் எண்-1 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது :

இன்று 10.08.2025-ந் தேதி 01.00 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.B.V.நந்தகோபால் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.M.குணசேகரன், த/பெ முத்துக்குமரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புதல் திரு.M.குணசேகரன் வயது 50/2025, த/பெ முத்துக்குமரன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர் பெறுதல் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளராகிய நான் 09.08.2025 அன்று பணியில் இருந்தபோது திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் வாகன ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு சான்று மற்றும் வாகன தகுதி சான்று வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் புரோக்கர்கள் மூலமாக மோட்டார் வாகன ஆய்வாளர் கையூட்டு பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/8/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகை பதிவு

10.08.2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B.V. Nandagopal
Rank: நிலை DSP .....No. எண் VIAC, TVR.

திருத்துறைப்பூண்டி தாலுக்கா, ஆலத்தம்பாடி வருவாய் சரக வருவாய் ஆய்வாளர் திரு.V.காளிமுத்து என்பவருடன் 09.08.2025-ந் தேதி காலை 10.00 மணிக்கு வந்தும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் அலுவலகத்திலிருந்து காலை 11.00 மணிக்கு புறப்பட்டு திருத்துறைப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு வந்து இரகசியமாக கண்காணித்து வந்த போது, மதியம் சுமார் 01.30 மணியளவில் மேலும் கூடுதலாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், சந்தேகத்திற்குரிய வகையில் வரம்பியம் விட்டுகட்டி ரோட்டில் சென்ற TN 55 BE 3366 Mahindra TUV 300 (Silver Grey Colour)என்ற வாகனத்தை பின்தொடர்ந்து சென்று, வரம்பியம் ரயில்வேகேட்டிற்கு அடுத்தாற்போல் வரம்பியம் OHT அருகே வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது, திருத்துறைப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அசோக்குமார் என்பவரிடமிருந்து கணக்கில்வராத ரூ.3,75,000/- இருந்தது. அதன்பின் அவரை அழைத்துக்கொண்டு திருத்துறைப்பூண்டி – திருவாரூர் மெயின் ரோட்டில் உள்ள தண்டலைச்சேரியில் அமைந்துள்ள திருத்துறைப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்திற்கு சென்று அலுவலகத்தில் சோதனை செய்தபோது அ2-பிரிவு - இளநிலை உதவியாளர் அமரும் இருக்கையின் முன்புறம் இருந்த ஸ்டீல் மேஜையின் இடதுபுற மேல் டிராயரிலிருந்து கணக்கில் வராத ரூ.21,780/-ம் ஆககூடுதல் ரூ.3,96,780/- கைப்பற்றப்பட்டது. இது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அசோக்குமார் என்பவரிடம் விசாரிக்க நாகப்பட்டினம், மயிலாடுதுறை சரகத்தில் உள்ள புரோக்கர்களால் ஒரு மாதம் வசூல் செய்து தன்னிடம் கொடுத்த தொகையினை எடுத்து கொண்டு தஞ்சாவூர் சென்று பின்னர் திருச்சிக்கு செல்வதாகவும் கூறியவர், பின்னர் புரோக்கர்கள் மூலம் தனக்கு வசூல் செய்து தரப்பட்ட பணம் என முன்னுக்குப்பின் முரணாக கூறினார். விசாரணையில் அவர் கூறிய காரணம் முன்னுக்குப்பின் முரணாகவும், ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் இருந்ததால், வாகன ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு சான்று மற்றும் வாகன தகுதி சான்று வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் புரோக்கர்களால் மாதந்தோறும் வசூல் செய்து அளிக்கப்படும் தொகை என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி தொகை கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி திருத்துறைப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அசோக்குமார் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். Sd XXXXXXX (M.Gunasekaran) Cell Inspector, District Inspection Cell Office, Thanjavur Madam, Received a Tamil typed petition On 10.08.2022 at 01.00 hrs from the Inspector. District Inspection Cell, Thanjavur and Thiruvarur and perused. In this connection a case in Thiruvarur V&AC, Cr.No.03/2025 U/s 106 BNSS and section 7 (a) of Prevention of Corruption Act 1988 as amended in 2018 against Tr.Ashok Kumar, Motor Vehicle Inspector, MVI Unit office Thiruthuraipoondi, Thiruvarur District on 10.08.2025 at 4.00 Hrs. Sd XXXXXX (B.V.Nandagopal) DSP, V&AC, TVR. திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று 09.08.2025-ந் தேதி

திருத்துறைப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் வாகன ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு சான்று மற்றும் வாகன தகுதி சான்று வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் புரோக்கர்கள் மூலமாக மோட்டார் வாகன ஆய்வாளர் கையூட்டு பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தஞ்சாவூர் ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.குணசேகரன் வயது 50/2025, த/பெ முத்துக்குமரன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டம் ஆகிய நான், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, ஆலத்தம்பாடி வருவாய் சரக வருவாய் ஆய்வாளர் திரு.V.காளிமுத்து வயது 50/2025, த/பெ வெள்ளையன் என்பவருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்றும், மேற்படி தகவலை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் தெரிவித்தும், அதன் பொருட்டு மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்வதற்காக திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன், திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இன்று 09.08.2025-ந்தேதி காலை 11.00 மணியளவில் புறப்பட்டும், திருத்துறைப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு வந்து இரகசியமாக கண்காணித்து வந்த போது, மதியம் சுமார் 01.30 மணியளவில் மேலும் கூடுதலாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், சந்தேகத்திற்குரிய வகையில், திருத்துறைப்பூண்டி, வரம்பியம் விட்டுகட்டி ரோட்டில் சென்ற TN 55 BE 3366 Mahindra TUV 300 (Silver Grey Colour)என்ற வாகனத்தை பின்தொடர்ந்து சென்று, வரம்பியம் ரயில்வேகேட்டிற்கு அடுத்தாற்போல் வரம்பியம் OHT அருகே வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது, வாகனத்தின் ஓட்டுனர் இருக்கையில் நீல நிற முழுக்கை சட்டையும், நீலநிற ஜீன்ஸ் பேன்ட் போட்ட ஒரு நபரும், ஓட்டுனர் இருக்கைக்கு அருகில் வாகனத்தின் முன் சீட்டில், கருப்பு வெள்ளை கோடுகள் போட்ட சாம்பல் நிற T-Shirt-ம், நீல நிற ஜீன்ஸ் பேன்ட் அணிந்தவாறு ஒரு நபரும் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் சோதனை குழுவினராகிய நாங்கள் எங்களை அறிமுகம் செய்து கொண்டு, முன்சீட்டில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க தனது பெயர் அசோக்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-1, திருத்துறைப்பூண்டி என்றும், டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்தவர் சுரேஷ் த/பெ காளியப்பன், குன்னூர், நாராயணகுளத்தெரு, திருத்துறைப்பூண்டி எனவும் தெரியவந்தது. அவர்கள் அமர்ந்திருந்த TN 55 BE 3366 Mahindra TUV 300 (Silver Grey Colour)என்ற வாகனத்தை சோதனை செய்தபோது , டிரைவர் சுரேஷ் அமர்ந்திருந்த சீட்டின் கீழிலிருந்து, VPN ஆப்டிக்கல்ஸ், VPN கண் மருத்துவமனை, எண்.25, நீலா தெற்குதெரு, நாகப்பட்டிணம் என்று எழுதப்பட்ட மஞ்சள் மற்றும் பிங்க் நிறமுடைய துணிப்பையை எடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அசோக்குமார் ஆஜர்படுத்தினார். அந்த பையினை சோதனை செய்தபோது, அதில் பணம் கத்தையாக இருந்ததாலும், மேற்படி நபர்கள் பதட்டமாக சந்தேகத்துக்குரிய வகையில் காணப்பட்டதால், மேற்படி இருவரையும் காருடன் திருத்துறைப்பூண்டி – திருவாரூர் மெயின்

ரோட்டில் உள்ள தண்டலைச்சேரியில் அமைந்துள்ள திருத்துறைப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்திற்கு மதியம் சுமார் 14.15 மணிக்கு அழைத்துவரப்பட்டது. மேற்படி அலுவலகம் பூட்டப்பட்டிருந்ததால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு அசோக்குமார் வைத்திருந்த சாவி மூலமாக அவரது அலுவலகமானது திறக்கப்பட்டது. அதன் பின்னர் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கை விபரம் பின்வருமாறு. இந்த திடீர் சோதனை குழுவில் இருந்த அலுவலர்கள் விவரம்: 1) திரு.M.குணசேகரன் வயது 50/2025, த/பெ முத்துக்குமரன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டம். 2) திரு.V.காளிமுத்து வயது 50/2025, த/பெ வெள்ளையன், வருவாய் ஆய்வாளர், ஆலத்தம்பாடி வருவாய் சரகம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம், 3. திரு .B.V.நந்தகோபால், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். திருத்துறைப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் இருந்த 2025 ஆம் ஆண்டிற்கான பணியாளர்களின் வருகை பதிவேட்டை பார்வையிட 1) திரு.சீனிவாசன், கண்காணிப்பாளர் மருத்துவ விடுப்பு, 2) ராஜசுவாதிகா, உதவியாளர், 3) எஸ்.வித்யா, இளநிலை உதவியாளர் எனவும் தெரியவந்தது. மேலும் அலுவலக உதவியாளர், இரவு காவலர் பணி காலியாக உள்ளது. இன்று 09.08.2025-ந் தேதி சனிக்கிழமை விடுமுறை என்பதால் பணிக்கு யாரும் வரவில்லை. மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகமானது வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேற்கு பக்க வாசல் அமைந்தவாறு திருவாரூர் மெயின்ரோட்டில் தண்டலைச்சேரி கிராமத்தில் அமைந்துள்ளது. இவ்வலுவலகமானது பல அறைகளை கொண்டுள்ளது. அலுவலகத்தின் உள்ளே நுழைந்தவுடன் வராண்டாவில் கண்காணிப்பாளர் இருக்கையும், அதை ஒட்டியவாறு இடதுபுறம் மோட்டார் வாகன ஆய்வாளர் அறையும், அவரது அறைக்கு கிழக்கில் அ1-பிரிவு உதவியாளர் அறையும்அதன் எதிர்புறம் தெற்கில் அ2-பிரிவு உதவியாளர் அறையும், அதில் தற்காலிக பணியாளர்கள் அமர்ந்திருக்கும் இருக்கையும், அதில் கார்ட்போர்ட் சீட்டால் அடைக்கப்பட்ட ஒரு அறையில் ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ளது. அதற்கு வடக்கு புறமாக பதிவு வைப்பறையும் அதனை அடுத்து சர்வர் ரூமும், போட்டோ எடுக்கும் அறையும், அதனை ஒட்டியவாறு பின்புறம் கழிவறைகள் உள்ளவாறு அலுவலகமானது அமைந்துள்ளது. விசாரணைக்கு அழைத்துவரப்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அசோக்குமார் TN 55 BE 3366 Mahindra TUV 300 எண் கொண்ட வாகனத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்த மஞ்சள் பையினை சோதனை செய்தபோது அதில் ஐநூறு ரூபாய் நோட்டுகள் 7 கட்டுகள் இருந்தது. அதை ஆய்வு குழு அலுவலர்கள் எண்ணிபார்த்த போது 500 x 700 நோட்டுகளாக கூடுதல் ரூ.3,50,000/- இருந்தது. 200x 125 நோட்டுகளாக கூடுதல் ரூ.25,000/- இருந்தது. ஆக கூடுதல் ரூ.3,75,000/- இருந்தது. இது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விசாரிக்க நாகப்பட்டினம், மயிலாடுதுறை சரகத்தில் உள்ள புரோக்கர்களால் ஒரு மாதம் வசூல் செய்து

தன்னிடம் கொடுத்த தொகையினை எடுத்து கொண்டு தஞ்சாவூர் சென்று பின்னர் திருச்சிக்கு செல்வதாகவும் கூறியவர் பின்னர் புரோக்கர்கள் மூலம் தனக்கு வசூல் செய்து தரப்பட்ட பணம் என முன்னுக்குப்பின் முரணாக கூறினார். விசாரணையில் அவர் கூறிய காரணம் முன்னுக்குப்பின் முரணாகவும், ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் இருந்ததால், வாகன ஓட்டுநர் உரிமம், வாகன பதிவு சான்று மற்றும் வாகன தகுதி சான்று வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் புரோக்கர்களால் மாதந்தோறும் வசூல் செய்து அளிக்கப்படும் தொகை என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்காணும் தொகை மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் மோட்டர் வாகன ஆய்வாளர் திரு.அசோக்குமாரினை சோதனை செய்ய அவரது பேன்டின் வலது பக்க பாக்கெட்டில் ரூ.1,000/- (500x1, 200x1, 100x3) தொகை இருந்தது. மேற்கண்ட தொகைகள் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அசோக்குமாரை விசாரணை செய்ய தனது சொந்த செலவிற்காக ஊதியத்திலிருந்து எடுத்த சொந்தபணம் என்று தெரிவித்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அசோக்குமாரின் TN 55 BE 3366 Mahindra TUV 300 எண் கொண்ட வாகனத்தை ஓட்டிவந்த திரு.சுரேஷ் தனிநபரை சோதனை செய்ய அவரது சட்டையில் இடது பக்க மேல் பாக்கெட்டில் ரூ.50/- இருந்தது. அவரை விசாரிக்க அவரது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. TN 55 BE 3366 Mahindra TUV 300 எண் கொண்ட வாகனத்தை சோதனை செய்ய, திருமதி.தேவிகாராணி, No.3862, தெற்கு இரண்டாம் தெரு, புதுக்கோட்டை, அன்னவாசல் என்ற பெயரில் வாகனத்திற்கு காப்பீடு செய்ததற்கான ஆவணம் இருந்தது. இது குறித்து அசோக்குமாரை விசாரிக்க தனது நண்பரான புதுக்கோட்டையை சேர்ந்த சந்தோஷ் என்பவரின் கார் எனவும் அவரது மனைவி தேவிகாராணி பெயரில் வாகனம் பதியப்பட்டுள்ளது என்றும், தனது சொந்த உபயோகத்திற்காக அவரிடமிருந்து மேற்படி காரினை கடந்த 6 மாதத்திற்கு மேல் பெற்று பயன்படுத்தி வருவதாக தெரிவித்தார். அலுவலகமானது சோதனை செய்யப்பட்டது. அதில் அ2-பிரிவு - இளநிலை உதவியாளர் அமரும் இருக்கையின் முன்புறம் இருந்த ஸ்டீல் மேஜையின் இடதுபுற மேல் டிராயரை சோதனை செய்தபோது அதில் ரப்பர் பேன்ட் சுற்றப்பட்ட நிலையில் ரூ.500/- நோட்டுக்கள் இருந்தது. அதனை எண்ணிபார்க்க ரூ.21,780/- (500x41, 200x2, 100x8, 20x4) இருந்தது. இது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளரிடம் விசாரிக்க வாரத்தின் செவ்வாய், வியாழன் ஆகிய இரு நாட்களில் திருத்துறைப்பூண்டி அலுவலகம் வந்து செல்வதாகவும், அந்த அறையில் உள்ள டேபிள் மற்றும் இருக்கைகள் A2 இளநிலை உதவியாளர் திருமதி.வித்யா மற்றும் தற்காலிக பணியாளர் திருமதி. அகிலா ஆகியோர் அமர்ந்திருக்கும் இருக்கை எனவும், மேற்படி தொகை குறித்த விபரம் அவர்களுக்கு தெரியும் என கூறினார். அவர் சொல்லக்கூடிய காரணம் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்ததாலும்,மேற்படி கணக்கில் வராத சந்தேகத்திற்கு இடமான தொகை என்பதால்

சந்தேகத்தின் அடிப்படையில் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையில் தனிநபர் பணபதிவேடு, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக பணியாளர் வருகை பதிவேடு, தற்காலிக பணியாளர் வருகை பதிவேடு ஆகியவை வழக்கின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. இச்சோதனையில் திருத்துறைப்பூண்டி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு தனிநபர்கள்/ புரோக்கர்கள் வழக்கமாக ஓட்டுனர் வாகன உரிமம், பதிவு சான்று மற்றும் வாகன தகுதி சான்றுகளை வழங்க ஒவ்வொரு வாரமும் தொகைகளை வசூல் செய்து அளித்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. தகவல் சொன்னதன் பேரில் திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.M.P.காளியப்பன் என்பவர் சுமார் 04.00 மணியளவில் திருத்துறைப்பூண்டி மோட்டார் ஆய்வாளர் அலுவலகம் வந்து அறிக்கை செய்து கொண்டார். எனவே மேற்படி திடீர் சோதனையில் கணக்கில் வராமல் கையூட்டாக பெற்று வைத்திருந்த கூடுதல் ரூ.3,96,780/- தொகையானது மேல் நடவடிக்கைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை இன்று 09.08.2025 ந் தேதி மதியம் 14.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 19.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனு, திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற நடுவர் திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும், இதன் நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒருநகல் நிலையக்கோப்பில் வைக்கப்பட்டது.

துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருவாரூர்.